C

# அறிவித்தல்

அரசியலமைப்பின் 121(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் "இலங்கைப் பொறியியற் பேரவை" எனும் சட்டமூலத்திற்கெதிராக ஆற்றுப்படுத்தப்பட்ட மனு சம்பந்தமாக உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை பாராளுமன்றத்திற்கு அறிவிக்க விரும்புகிறேன்.

இச்சட்டமூலத்தில்,-

(i) வாசகம் 3(ஆ) இல் பேரவையில் பொறியியல் தொழில்நுட்பவியலர்களின் நியமனம் உள்ளடக்கப்படாதது அரசியலமைப்பின் 12(1) ஆம் உறுப்புரைக்கு முரண்படுகின்றதெனவும்;

(ii) 41 ஆம் வாசகத்தில் குறிப்பிடப்பட்டவாறு எல்லா வகையான பொறியியற் தொழிலர்களின் நியாயமான பிரதிநிதித்துவமொன்றை நியமிக்கத் தவறியமை அரசியலமைப்பின் 12(1) ஆம் மற்றும் 12(2) ஆம் உறுப்புரைகளுடன் முரண்படுகின்றதெனவும்;

(iii) சட்டமூலத்தின் வாசகங்களான 3(ஆ), 4(1), 4(2), 4(3), 4(4), 4(6), 5(1), 5(2), 8(2) 8(3), 8(4)(அ), 8(4)(ஆ), 8(5), 8(6), 11, 16(6), 20(1), 20(3), 21(1), 21(8), 29, 30(1), 30(2), 31(1), 31(2), 34(1), 34(2) 38(1), 38(2), 38(3) (அ) மற்றும் 38(4) போன்றவை அரசியலமைப்பின் 3 ஆம், 43(1) ஆம் மற்றும் 43(3) ஆம் உறுப்புரைகளுடன் முரண்படுகின்றதெனவும், அந்த வாசகங்கள் தற்போதுள்ளவாறு நிறைவேற்றப்படுவதற்கு அரசியலமைப்பின் 84(2) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளின் கீழ் விசேட பெரும்பான்மையுடனும் அரசியலமைப்பின் 83 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளின் கீழ் மக்கள் தீர்ப்பினால் மக்களால் அங்கீகாரம் பெறப்படவேண்டுமெனவும்;

(iv) 9(3) ஆம் வாசகம் அரசியலமைப்பின் 12(1) ஆம் உறுப்புரைக்கு முரண்படுகின்றதெனவும்;

(v) இச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படுகின்ற வெவ்வேறு வகுதியைச் சேர்ந்த பொறியியற் தொழிலர்களின் பங்களிப்புக்கள், பொறுப்புடமைகள், கடமைகள் மற்றும் தகுதி என்பவற்றை தீர்மானிக்க தேவைப்படுகின்ற வழிகாட்டல் விதப்புரைகள் 39(2)(உ)ஆம் வாசகத்தில் உள்ளடக்கப்படாததனால் இவ்வாசகம் அரசியலமைப்பின் 12(1) ஆம் உறுப்புரையை மீறுகின்றதெனவும்,

உயர் நீதிமன்றத்தினால் தீர்ப்பளிக்கப்பட்டிருக்கின்றது.

உயர் நீதிமன்ற தீர்மானத்தில் குறிப்பிட்டபடி மேற்கூறப்பட்ட வாசகங்கள் திருத்தப்படுமாயின் அம்முரண்பாடுகள் நீங்கும் என உயர் நீதிமன்றம் மேலும் தீர்ப்பளித்துள்ளது.

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு இன்றைய கூட்ட நடவடிக்கைகள் பற்றிய அதிகார அறிக்கையில் பதிப்பிடப்பட வேண்டுமென நான் கட்டளையிடுகின்றேன்